# வடக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் தொண்டராசிரியர்களிற்கு இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் II இற்கு நியமனம் வழங்கல் ( இரண்டாம் கட்டம் ).

மத்திய கல்வி அமைச்சின் செயலாளரது ED/2/29/414/23/1-II இலக்க 09.07.2018 ஆம் திகதிய கடிதம் மூலம் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 457 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் **22.07.2018** ஆம் திகதி **யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்** இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளது.

அத்தினம் காலை 8.00 மணிக்கு வைபவம் நடைபெறும் இடத்திற்கு நியமனம் பெறும் ஆண் ஆசிரியர்கள் **கறுப்பு நிற முழுக் காற்சட்டையும், வெள்ளை நிறச் சட்டையும்** (சேட்) **கழுத்துப்பட்டியும்** (ரை) அணிவதோடு பெண் ஆசிரியர்கள் **இளநிறத்திலான சேலை** அணிந்து வருகை தரவேண்டும்.

இவர்களுக்குரிய அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் பெயர் விபரங்களை வட மாகாண சபையின் இணையத்தளமான www.np.gov.lk இலும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளமான www.edumin.np.gov.lk இலும் பார்வையிடமுடியும்.

மேலும் நியமனத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள 457 தொண்டராசிரியர்களது தகைமைகள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் **“செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர். ”** எனும் முகவரிக்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்கமுடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

சி. சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்.